வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: மலர்விழி

நாள்: 25.10.2024 நேரம்: மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

3 நாள் பயணமாக இந்தியா வந்துள்ள ஜெர்மன் சேன்சலர் திரு. ஓலஃப் ஸ்கோல்ஸ், இன்று புதுடெல்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து பேசினார்.

மத்திய கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங், இன்று புதுடெல்லியில், தேசிய அளவிலான 21ஆவது கால்நடை கணக்கெடுப்புப் பணிகளைத் தொடக்கி வைத்தார்.

ஒடிசாவில், டானா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், மீட்புப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

புதுச்சேரியில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு, இலவச வேட்டி-சேலைக்கு பதிலாக, வங்கிக் கணக்கில் தலா ஆயிரம் ரூபாய் செலுத்தும் பணிகளை, முதலமைச்சர் திரு.ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

---

*மோடி சந்திப்பு* (13)

3 நாள் பயணமாக நேற்று இரவு இந்தியா வந்து சேர்ந்த ஜெர்மன் சேன்சலர் திரு. ஓலஃப் ஸ்கோல்ஸ், இன்று புதுடெல்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து பேசினார். பொருளாதாரம், முதலீடு, தொழில்நுட்பம், உற்பத்தி, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில்

ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும், பரஸ்பர அக்கறை உள்ள உலகப் பிரச்சனைகள் குறித்தும், இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டது. இருதலைவர்களும் இணைந்து, இன்று பிற்பகல் புதுடெல்லியில், இந்தியா மற்றும் ஜெர்மனி அரசுகளுக்கு இடையிலான, 7ஆவது ஆலோசனைகளை தொடக்கி வைத்தனர். இதன்படி, பல்வேறு துறைகளுக்கான இருநாட்டு அமைச்சர்களும் தத்தம் துறைகள் குறித்து விவாதித்து, இருநாட்டு அரசுகளுக்கும் அறிக்கை கொடுக்க உள்ளனர். அரசுக்கு அரசு என்ற அடிப்படையில், ஜெர்மனி ஆலோசனை மேற்கொள்ளும் ஒரு சில நாடுகளில், இந்தியாவும் ஒன்றாகும்.

---------------------------

*மோடி-ஜெர்மனி (20)*

முன்னதாக, ஜெர்மன் வர்த்தகம் குறித்து, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற 18ஆவது ஆசியா-பசிபிக் மாநாட்டில், பிரதமர் திரு. நரேந்திர மோடி பேசுகையில், இந்தியா தற்போது, திறமை, தொழில்நுட்பம், புதுமையாக்கம், உள்கட்டமைப்பு ஆகிய நான்கையும் கருவிகளாகக் கொண்டு, வளர்ச்சி அடைந்து வருவதாக கூறினார். ஜனநாயகம், இளைஞர் பலம், சந்தைத் தேவை, தகவல் தரவுகள் ஆகிய 4 தூண்கள் மீது இந்தியா நிற்பதாக அவர் தெரிவித்தார். இந்தியாவிற்கும்-ஜெர்மனிக்கும் இடையிலான கூட்டாண்மை உறவுகள், 25 ஆண்டுகளை எட்டி இருப்பதை அவர் சுட்டிக் காட்டி, அடுத்த 25 ஆண்டுகளில் இவ்வுறவுகள், புதிய உயரங்களை எட்டும் என்றார். இந்திய தொழில்முறை

வல்லுனர்களுக்கான ஜெர்மனியின் வருடாந்திர விசா கோட்டா, 20 ஆயிரத்தில் இருந்து, 90 ஆயிரமாக உயர்த்தப் பட்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார். இதனால் ஜெர்மனியில், இந்திய தொழில்முறை வல்லுனர்களுக்கான வாய்ப்புகள் அதிகரிப்பதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளும் வலுப்பெறும் என்று அவர் கூறினார். ஜெர்மன் சேன்சலர் திரு. ஓலஃப் ஸ்கோல்ஸ் இம்மாநாட்டில் பேசுகையில், உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாகவும், உலகிலேயே மிக வேகமாக வளரும் முக்கிய பொருளாதாரங்களில் ஒன்றாகவும் திகழும் இந்தியாவிற்கும், ஜெர்மனிக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துதல் அவசியம் என்றார்.

---------------------------

*சுகாதாரம்* (16)

நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பை மேம்படுத்த, பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு பல்வேறு முன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜே.பி நட்டா கூறியுள்ளார். இன்று டெல்லி பல்கலைக்கழக மருத்துவ அறிவியல் கல்லூரியின் 53ஆவது நிறுவன நாள், மற்றும் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், நாட்டில் மொத்தமுள்ள எய்ம்ஸ் மருத்துவ மனைகளின் எண்ணிக்கை, 6ல் இருந்து, 22ஆக உயர்த்தப் பட்டுள்ளதாகவும், தரமான 3ஆம் நிலை மருத்துவ சேவைகளை மக்களுக்கு வழங்குவதில், பிராந்திய ஏற்றத் தாழ்வுகள் நீங்கி இருப்பதாகவும்,

கூறினார். நாட்டில், மொத்தமுள்ள மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கையும், கடந்த 10 ஆண்டுகளில், 387ல் இருந்து, 766ஆக அதிகரிக்கப் பட்டுள்ளதால், இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்களும் பெரிய அளவில் அதிகரித்து இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். அடுத்த 5 ஆண்டுகளில், மேலும் 75 ஆயிரம் மருத்துவ மாணவர் சேர்க்கை இடங்களை உருவாக்க, அரசு முடிவு செய்து இருப்பதாக அவர் மேலும் கூறினார்.

---------------------------

*கால்நடை (11)*

நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கை தொடர்பாக, அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் வரை நடைபெற உள்ள, 21ஆவது கணக்கெடுப்புப் பணிகளை, மத்திய கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங், புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார். ஜி-20 கூட்டமைப்பின் Pandemic Fund உதவியுடன், இந்தியாவில், கால்நடைக் கொள்ளை நோய்களுக்கு எதிரான தயார் நிலையை மேம்படுத்தும் திட்டமும், தொடக்கி வைக்கப்பட்டது. கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோயை, 2030ஆம் ஆண்டிற்குள் முற்றிலும் ஒழிக்க, அரசு உறுதி பூண்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். தேசிய அளவிலான கால்நடைக் கணக்கெடுப்பு முடிவுகள், கால்நடை நோய்களை கட்டுப்படுத்துவதற்கான கொள்கைகளை வகுப்பதில், முக்கிய பங்களிக்கும் என்று அவர் கூறினார்.

---------------------------

*ஜார்கண்ட்* (8)

ஜார்கண்டில், 43 தொகுதிகளில் நவம்பர் 13ஆம் தேதி நடைபெற உள்ள, முதல்கட்ட சட்டமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல், இன்றுடன் முடிவிற்கு வந்துள்ளது. நேற்று வரை, 748 பேர் வேட்பு மனு தாக்கல் செய்திருந்த நிலையில், மொத்தம் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன. முதல்கட்ட ஜார்கண்ட் சட்டமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுப் பரிசீலனை நாளை நடைபெற உள்ளது. ஏற்கப்பட்ட மனுக்களை விலக்கிக் கொள்ள, வரும் 30ஆம் தேதி கடைசி நாளாக இருக்கும்.

---------------------------

*வானிலை* 1 (17)

வங்கக் கடலில் உருவான டானா தீவிர புயல், இன்று அதிகாலை, பித்தர்கனிகா-தாம்ரா இடையே, ஒடிசா கரையை கடந்தது. மணிக்கு 120 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்றுடன் கனமழை பெய்ததால், ஒடிசா மாநிலத்தின் கேந்திரபாரா, பத்ரக் மற்றும் பாலாசோர் மாவட்டங்களில், புயலால், பல இடங்களில் மரங்கள் மற்றும் மின் கம்பங்கள் வேரோடு சாய்ந்தன. கூரை வீடுகளும், பல்லாயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில், நெற் பயிர்களும் பாதிக்கப்பட்டன. சாய்ந்த மரங்களை அகற்றி, சாலைகளை சீர்படுத்தும் பணிகளில், மத்திய – மாநில பேரிடர் மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். மின்சாரம் துண்டிக்கப்பட்ட இடங்களில், இன்று மாலைக்குள் மின் விநியோகத்தை மீண்டும் தொடக்க, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புயலுக்கு பிந்தைய நிலவரங்கள் குறித்து, ஒடிசா முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி, இன்று காலை புவனேஸ்வரில், உயர்நிலை மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். புயலால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்பட்டதாக தகவல் இல்லை என்றும், உயிர் சேதத்தை பூஜ்யமாக கட்டுப்படுத்தும் இலக்கை, அரசு எட்டி இருப்பதாகவும் அவர் கூறினார். தொடர்ந்து, புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, முதலமைச்சர் வான் வழியே பார்வையிட்டார்.

*வானிலை* 2 (17)

டானா புயல், மேற்கு வங்கத்தை நேரடியாக தாக்கவில்லை என்றாலும், மேற்குவங்கத்தின் கிழக்கு மேதினிபூர், மேற்கு மேதினிபூர் உள்ளிட்ட மாவட்டங்களில், கனமழையால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதற்கிடையே, ஒடிசா கரையை கடந்த புயல், பின்னர், ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுக்குறைந்த போதிலும், பாலாசோர், பத்ரக் மற்றும், மயூர்பஞ்ச் மாவட்டங்களில், மிக கனமழையும், கேந்திரபாரா, கட்டக் உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழையும், இன்றும், நீடிக்கக் கூடும் என, இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, தெற்கு கேரளக் கரையை ஒட்டிய தென்கிழக்கு அரபிக் கடல் பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், வரும் 31ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

இன்றைய தினம், தேனி, திண்டுக்கல், நெல்லை, குமரி, கரூர், நாமக்கல், தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டங்களிலும், காரைக்கால் பகுதியிலும், ஓரிரு இடங்களில்



கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடமேற்கு, மத்திய கிழக்கு, மற்றும், மத்திய வங்கக் கடல் பகுதிகளிலும், ஒடிசா, மற்றும், மேற்குவங்கத்தின் கடற்கரை பகுதிகளிலும், நாளை மாலை வரை பலத்த சூறாவளிக் காற்று வீசக் கூடும் என்பதால், மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். கேரள கடலோர பகுதிகள், மற்றும், லட்சத் தீவு கடல் பகுதிகளுக்கும், இன்றும், நாளையும், மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் அதிகபட்சமாக, சேலம் மாவட்டம் ஆனைமடுவு அணையில், 15 செ.மீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரி பாகூரில், 6 செ.மீட்டர், மற்றும், காரைக்காலில் 2 செ.மீ மழை பெய்துள்ளது.

---------------------------

*ரங்கசாமி* (13)

புதுச்சேரியில், 18 வயது பூர்த்தி அடைந்த, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் 1 லட்சத்து 27 ஆயிரத்து 612 பேருக்கு, தீபாவளி பண்டிகைக்கான இலவச வேட்டி-சேலைக்கு பதிலாக, அவரவர் வங்கிக் கணக்கில், தலா ஆயிரம் ரூபாய் செலுத்தும் பணிகளை, முதலமைச்சர் திரு.ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. சாய் சரவணன் குமார், துறைச் செயலர் திருமதி முத்தம்மா உள்ளிட்டோர் உடன் இருந்தனர். கால அவகாசம் இல்லாத காரணத்தால், இம்முறை வேட்டி-சேலைக்கு பதிலாக பணம் வழங்கப் படுவதாகவும், 2025ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின் போது, வேட்டி-சேலை வழங்கப்படும் என்றும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

*நமச்சிவாயம்* (12)

தீபாவளி பண்டிகையின் போது புதுச்சேரியில், சட்டம்-ஒழுங்கு மற்றும் போக்குவரத்து தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் குறித்து, மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். மக்கள் அதிகம் கூடும் இடங்கள், மற்றும், போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள இடங்களில் கூடுதல் எண்ணிக்கையில் காவலர்களை பணியில் ஈடுபடுத்த, அவர்

அறிவுறுத்தினார். ஊர்க்காவல் படையினருக்கு பயிற்சி அளிப்பது குறித்தும் ஆலோசிக்கப் பட்டதாகவும், வரும் 4ஆம் தேதி முதல், பயிற்சி அளிக்கப்படும் என்றும் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார். உதவி ஆய்வாளர், மற்றும், கோஸ்டல் ஹோம்கார்ட் பணியிடங்களை நிரப்புவது குறித்தும், போதைப் பொருள் நடமாட்டம், மற்றும், சைபர் குற்றங்களை கட்டுப்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப் பட்டதாக அவர் கூறினார்.

---------------------------

*காப்பி எடிட்டர் (18)*

ஓர் அறிவிப்பு

புதுச்சேரி ஆகாஷ்வாணி வானொலி நிலையத்தில் ஒப்பந்த அடிப்படையிலான ஒரு Copy Editor பணியிடத்திற்கு, விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. 35-வயதிற்கு உட்பட்ட பட்டதாரிகள், ஊடகத் துறையில் 5 ஆண்டு அனுபவம் பெற்றிருந்தால், இதற்கு விண்ணப்பிக்கலாம். இதழியல், வெகு ஜனத் தொடர்பியல், மற்றும் சம்பந்தப்பட்ட இதர துறைகளில் பட்டம் அல்லது முதுகலைப் பட்டயம் பெற்றவர்களாக இருந்தால், 3 ஆண்டு ஊடகத் துறை அனுபவம் போதுமானது. விண்ணப்ப தாரர்கள், இந்தி அல்லது ஆங்கிலம், மற்றும், தமிழில் மொழித் திறன் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத் தேடுதல் பொறியின் பயன்பாட்டில் அனுபவம் உள்ளவர்களாகவும், நடப்பு விவகாரங்கள், பிராந்தியப் பிரச்சனைகள், மற்றும் தேசியப் பிரச்சனைகளை அறிந்தவர்களாகவும்

இருத்தல், விரும்பத் தக்க தகுதியாக கருதப்படும். ஓராண்டு காலத்திற்கான, பின்னர் நீட்டிக்கத் தகுந்த, இந்த முழுநேர ஒப்பந்தப் பணிக்கு, மாதம் 35 ஆயிரம் ரூபாய் தொகுப்பூதியம் வழங்கப்படும். தகுதியும், மேற்கூறிய நிபந்தனைகளின் அடிப்படையில் பணிபுரியும் ஆர்வமும் உள்ளவர்கள், applications.prasarbharati.org என்ற இணையதளம் மூலம், உரிய சான்றிதழ் நகல்களுடன் விண்ணப்பிக்கலாம்.

---------------------------

*சமூக நீதி* (12)

சமுதாயத்தில் பின்தங்கி நிலையில் விடப்பட்ட பிரிவினரின் நிதி நிலைழ மற்றும் வாழ்வாதாரங்களை உயர்த்த, கொள்கை ரீதியிலான தலையீடுகள் அவசியம் என்று, மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறைச் செயலர் திரு. அமீத் யாதவ் கூறியுள்ளார். நலிவடைந்த பிரிவினரின் பொருளாதார வளர்ச்சி குறித்து, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் அவர் பேசுகையில், ஏழைகளுக்கான வாய்ப்புகளையும், புதிய சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்கான நெகிழ்வுத் தன்மையையும் அதிகரித்தல் அவசியம் என்றார். மத்திய ஊரக வளர்ச்சித் துறைச் செயலர் திரு. எஸ்.கே சிங், திறன் மேம்பாட்டுத் துறைச் செயலர் திரு. ஏ.கே. திவாரி உள்ளிட்டவர்களும் கருத்தரங்கில் உரையாற்றினர். சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகம், உலக வங்கியுடன் இணைந்து, இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து இருந்தது.

---------------------------

3 நாள் பயணமாக இந்தியா வந்துள்ள ஜெர்மன் சேன்சலர் திரு. ஓலஃப் ஸ்கோல்ஸ், இன்று புதுடெல்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து பேசினார்.

மத்திய கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங், இன்று புதுடெல்லியில், தேசிய அளவிலான 21ஆவது கால்நடை கணக்கெடுப்புப் பணிகளைத் தொடக்கி வைத்தார்.

ஒடிசாவில், டானா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், மீட்புப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

புதுச்சேரியில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு, இலவச வேட்டி-சேலைக்கு பதிலாக, வங்கிக் கணக்கில் தலா ஆயிரம் ரூபாய் செலுத்தும் பணிகளை, முதலமைச்சர் திரு.ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.